RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s617

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் மருத்துவப் பண்புகள்

மு. சரவணன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா

# Clinical Properties in Sangam Literature

**M. Saravanan [a, *]**

[a] Department of Tamil, Presidency College (Autonomous), Chennai-600005, Tamil Nadu, India

* Corresponding Author:
saranmjs@gmail.com

Received: 30-10-2021
Revised: 30-04-2022
Accepted: 11-05-2022
Published: 16-07-2022

Check for updates

## ABSTRACT

The people of the Sangam period lived a high life in harmony with nature. Sangam literature and other literature conveyed to the world that they excelled in various fields like geology, astronomy, medicine, etc. Living in harmony with nature in all stages of their lives, the Tamils used the types of plants like trees, plants, and vines and their parts to make their lives better. The same has been shown in literature as parables, metaphors, and symbols. The ancient Tamils lived dividing medicine as health medicine and psychiatry. It can be known through the literature that medicine for physical health has been classified as natural medicine, music medicine, and surgical medicine, and they have been maintaining health on the basis of food as medicine, and they have removed stress through methods such as relaxation, soothing, and hysteresis as medicine for mental health. Also, classifying the diseases as pain, illness, and suffering, they prescribed medicines for them. Our forefathers used to call doctors "pathologists" and medical women "doctor and midwife." Also, this article is a study that shows the people of the Sangam period knew the medicinal properties of plants and used them as food and medicine with the high principle of 'food is medicine and medicine is food'.

**Keywords:** Naturopathy, Surgery, Depression, Disease Pharmacist,

## முன்னுரை

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த உயர்ந்த வாழ்க்கையினை மேற்கொண்டுள்ளார்கள். அவர்கள் நிலவியல், வானியல், மருந்தியல் முதலான பல் துறைகளில் சிறந்து விளங்கியுள்ளார்கள் என்பதைச் சங்க இலக்கியங்களும் பிற இலக்கியங்களும் உலகுக்கு எடுத்துக் கூறுகின்றன. இயற்கையோடு இயற்கையாக ஒன்றி வாழ்ந்த தமிழர் தங்களின் வாழ்வின் எல்லா நிலைகளிலும் மரம், செடி, கொடி என்ற தாவர வகைகளையும் அவற்றின் உறுப்புகளையும் பயன்படுத்தி தங்களின் வாழ்க்கையைச் சிறந்தாக அமைத்திருந்தார்கள். அவற்றையே உவமையாகவும், உருவகமாகவும் குறியீடாகவும் இலக்கியங்கள் காட்டுகின்றன (Govindan, 1990). மேலும், சங்ககால மக்கள் 'உணவே மருந்து, மருந்தே உணவு' என்ற உயர்ந்த கோட்பாட்டோடு தாவரங்களின் மருத்துவப் பண்பினை அறிந்து அவற்றினை உணவாகவும், மருந்தாகவும் பயன்படுத்தி வந்துள்ள பண்பினை எடுத்துரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## சங்ககால மக்களின் வாழ்வியல்

சங்ககால மக்களின் வாழ்வியல் உயர்ந்த நாகரீகப் பண்பாட்டைக் கொண்டதாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் மூலம் அறியமுடிகின்றது. "உலகத்தில் தமிழர் சமுதாயத்தைத் தவிர வேறு எந்தச்

சமுதாயமும் இப்படி அகப் புற வாழ்க்கையில் இயற்கையோடு ஒன்றியிருந்தது இல்லை. அவ்வாறு ஒன்றியிருப்பினும் இயற்கைக்கு முதலிடம் கொடுத்ததும் இல்லை. முதலிடம் கொடுத்தாலும் அவைகளை இலக்கியங்கள் ஆக்கியது கிடையாது" எனப் கூறுகிறார் (Pasumalaiyarasu, 2006). சங்ககால மக்கள் இயற்கையினைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றி வாழ்வியலை அமைத்துக் கொண்டார்கள்.

ஆதி மனிதன் இயற்கைப் பேரிடர்கள், விபத்துகள் முதலான காரணங்களால் தங்களுக்கு நேரிடுகின்ற உடல்நலக் கேடுகளினின்றும் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய சூழல் இருந்தது. எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளவது என்று நினைத்தபோது, ஆதிமனிதன் மிருகங்களின் செயல்பாடுகளைக் கூர்ந்து கவனித்து மிருகங்கள் எவ்வாறு நோய்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றன. நோயுறும் காலங்களில் அவற்றின் செயல்பாடுகள் எவ்வாறு அமைகின்றன என்பனவற்றையும் கவனித்தான். உணவுக்குப் பயன்படும் தாவரங்களையும் நோய் தீர்க்கும் மருத்துவக் குணம் படைத்த தாவரங்களையும் உயிரினைக் கொல்லும் நச்சுத் தாவரங்களையும் இனம் கண்டறிந்து தேவைக்கேற்ப அத்தாவரங்களைப் பயன்படுத்தும் முறையினை அறிந்து கொண்டான். அதன் அடிப்படையிலே மூலிகை மருத்துவம், தமிழ் மருத்துவமாக முதலில் தோன்றியது எனலாம். இதுவே சங்ககால மக்களின் உணவுப் பழக்க வழக்கத்திற்கும், மருத்துவ முறைகளுக்கும் அடிப்படையாகக் கருதப்படுகின்றன.

## உணவுப் பழக்கவழக்கங்களில் மருத்துவப் பண்புகள்

பழந்தமிழ் இலக்கியங்கள் பழங்காலத் தமிழர்களின் உணவுப் பழக்க வழக்கங்களை எடுத்துக் கூறுகின்றன. "உலகில் முதன் முதல் உணவை நாகரீகமாய்ச் சமைத்து உண்டவன் தமிழனே! ஏனைய நாட்டாவரெல்லாம் தம் நாட்டில் விளைந்த உணவுப் பொருள்களைப் பச்சையாகவும், சுட்டும் வெறுமையாய் அவித்தும் உண்டுவந்த காலத்தில் உணவைச் சோறும், கறியும் என இரண்டாக வகுத்து, நெல்லரிசியைச் சோறாகச் சமைத்தும், கறி அல்லது குழம்பு வகைகளை, சுவையூண்டுவனவும், உடம்பை வலுப்படுத்துவனவும், நோய்வராது தடுப்பனவுமான பலவகை மருந்துச் சரக்குகளை உசிலை (மசாலா) யாகச் சேர்த்து ஆக்கியும் உயர்வாக உண்டு வந்த பெருமை தமிழனதாகும்" என கூறியுள்ளார் (Devaneya Pavanar, 2007).

சங்ககால மக்கள் இயற்கைத் தந்த நல்லுணவை உண்டு உயிர் வாழ்ந்தார்கள். என்பதை,

"மஞ்சள் முன்றில் மணம் நாறு படப்பை

தண்டலை உழவர் தனி மனை சேப்பின்

திரள் அரை பெண்ணை நுங்கொடு பிறவும்

தீம் பல் தாரம் முனையின் சேம்பின்"

உழவர்கள் தம் இல்லங்களுக்கு வரும் விருந்தினர்களுக்குப் பெரிய பலாக்கனிகள், இளநீர், முற்றிய வாழைக்கனி, நுங்கு, இனிப்புப் பண்டங்கள், கிழங்கு வகைகள் முதலியவற்றைப் படைத்து விருந்தாகக் கொடுத்து உபசரித்தார்கள். எனப் பெரும்பாணாற்றுப்படை கூறுவதன் மூலம் அறிய முடிகின்றது (Swaminatha Iyer, 1974). உயிர்கள் வாழ்வதற்கு உணவு இன்றிமையதாகும். என்பதை,

"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே

உண்டி முதற்றே உணவின் பிண்டம்"

எனப் புறநானூறு கூறுகின்றது (Swaminatha Iyer, 2014). சங்கத் தமிழர்களின் உணவுமுறைகள் நிலத்தின் அடிப்படையில் வெவ்வேறு வகையினவாக இருந்திருக்கின்றன. தொழில் அடிப்படையிலும், பருவத்துக்கு ஏற்றவாறும் வயதுக்குத் தக்கவாறும் வேறுபட்டுக் காணப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' என்ற கொள்கையின் அடிப்படையில் வாழ்ந்து வந்துள்ளார்கள். உணவு உட்கொள்ளத் தேவையான குழம்புகளைத் தாளிதம் செய்து உண்ணும் பழக்கம் தமிழர்களிடமே முதலில் காணப்பட்டது. சங்க இலக்கியங்கள் தாளிப்பினை, 'குய்' என வழங்குகின்றது. 'குய்யுடை அடிசில்' எனப் புறநானூறும், (127) 'குய்ப்புகை' எனக் குறுந்தொகையும் (164) சுட்டுகின்றன

(Somasundranaar, 1962). தமிழர்கள் சூட்டைத் தணிக்கும் தன்மை கொண்ட புழுங்கல் அரிசியை விரும்பியுண்டார்கள். அந்த அரிசியை 'இரும்புப் பூண் அணிந்த உலக்கையால் வெண்மையாகத் தீட்டி' எனச் சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது (Swaminatha Iyer, 1974).

சங்ககால மக்கள் தாவர, மாமிச உணவைக் கலந்து உண்டு இயற்கையோடு இயைந்து வாழ்ந்ததால் அவர்களின் உடல் ஆரோக்கியமாகவும், திடமாகவும் காணப்பட்டது. எனவே தான் சங்க இலக்கியங்கள் "பனைத்திரள் அன்ன பருஏர் எறுழ்த் தடக்கை" எனவும், "வைகல் எண்தேர் செய்யும் தச்சன், திங்கள் வலித்த கால் அன்னோனே" என்று பலவாறு வரும் பாடல்கள் மூலம் பண்டைத் தமிழரின் உடல் உறுதிப்பாட்டையும், மனத்திட்பத்தையும் அறிந்துகொள்ள முடிகின்றது (Jeyabal, 2004; Swaminatha Iyer, 2014).

## நோயற்ற வாழ்வு

சங்ககால மக்களின் வாழ்க்கை முறையே அவர்கள் நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு அடிப்படையாக அமைந்தது. சங்ககால மக்கள் பன்னெடுங்காலம் நோய் நொடியின்றி வாழ்ந்தனர். ஆயுட்காலம் நீண்டு நீண்ட காலம் வாழ்வதற்கு இயற்கை மூலிகை உணவே அடிப்படைக் காரணம் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அதியமான் என்ற மன்னன் ஔவையார் நீண்டகாலம் வாழவேண்டும் எனக் கருதி ஆயுளை நீட்டிக்கும் வல்லமை படைத்த நெல்லிக் கனியைக் கொடுத்தான் எனப் புறநானூறு (91) கூறுகின்றது (Swaminatha Iyer, 2014).

ஆரோக்கியமான வாழ்வுக்கு மனக்கட்டுப்பாடு மிக அவசியமாகின்றது. யோகம், தியானம், நோன்பு என்பனவற்றை இந்திய மருத்துவமுறை முக்கியமானவையாகக் கூறுகின்றது. சங்ககால மக்கள் பலவிதமான நோன்புகளை மேற்கொண்டுள்ளார்கள் என்பதைச் சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது. குறிப்பாக, 'காமன் நோன்பு, பாவை நோன்பு, சிலம்புகழி நோன்பு, வடக்கிருத்தல் நோன்பு' போன்ற நோன்புகளைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. நோன்பு இருத்தலைப் பற்றிக் கலித்தொகையும் (129), வடக்கிருத்தல் நோன்பு பற்றிப் புறநானூறும் (219) கூறுகின்றன (Jeyabal, 2004; Swaminatha Iyer, 2014). காமநோய் தெய்வத்தால் வருவதென்பதும், அதற்கு மருந்து நோன்பு என்பதும் கலித்தொகையின் மூலம் அறியமுடிகின்றது.

சங்ககால மக்கள் உடல் மற்றும் மனவளர்ச்சிக்கு நீர் மிக இன்றியமையாதது என்ற உண்மையை நன்கு அறிந்து இருந்தார்கள். எனவே தான் பாரதம் பாடிய பெருந்தேவனார், "எல்லா உயிர்க்கும் ஏமமாகியது நீர்" எனக் கூறுகின்றார் (Swaminatha Iyer, 2014). இக்கருத்தையே குடபுலவியனார் என்ற புலவரும்,

"நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

உண்டி முதற்றே உணவின் பிண்டம்

உடம்பும் உயிரும் படைத்திசி னோரே"

என உடலைப் பேண நீர் அவசியம் என்பதைத் தெளிவுப்படுத்தியுள்ளார் (Swaminatha Iyer, 2014).

## மருத்துவன்

மருத்துவர்கள் சமுதாயத்தில் எல்லா காலங்களிலும் சிறப்புப் பெற்றே வந்துள்ளார்கள். இறைவனுக்கு அடுத்தபடியாக உயிர்காக்கும் இறைவனாக அவர்களை மக்கள் போற்றுகின்றார்கள். சங்ககாலத்தில் சாகப்போகும் உயிரை மீட்டுத் தருவோராக மருத்துவர்கள் கருதப்பட்டதை,

"இன்னுயிர் போத்தகுந் மருத்துவர்"

எனக் கலித்தொகைக் குறிப்பிடுகின்றது (Subramanian, 2010). நோய்தீர்க்கும் கலையில் தேர்ச்சிபெற்று மருத்துவத் தொழிலைச் செய்தவர்களை, 'மருத்துவர்கள், வைத்தியர்கள், அறவோன், மருத்தன்' எனச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. தொல்காப்பியம் மருத்துவர்களை, 'நோய் மருங்கறிஞர்' எனக் கூறுகின்றது. மருத்துவத் தொழில்புரியும் பெண்கள் 'மருத்துவி, மருத்துவச்சி'என அழைக்கப்பட்டார்கள்.

சங்ககால மருத்துவர்கள் நோயாளியாகத் தங்களைப் பாவித்துக் கொண்டு சிகிச்சையளிக்க வேண்டும் என்பதை,

"பிறர் நோயும் தம்நோய்போல் போற்றி அறன் அறிதல்

சான்றவர்க்கு எல்லாம் கடன்"

எனக் கலித்தொகை கூறுகின்றது (Subramanian, 2010). மேலும் மருத்துவன் நோயாளியின் நோயின் தன்மையினையும் நோய் தீரும் காலமும் கருதி சிகிச்சையைத் தொடங்க வேண்டும் என்பதை,

"உற்றவன் அளவும் பிணியளவும் காலமும்

கற்றான் கருதிச் செயல்"

எனத் திருக்குறள் கூறுகின்றது (Pasupathi, 2010). மேலும் நோயினைப் போக்கும் மருந்தின் தன்மையினை மருத்துவர்களே தீர்மானித்து மருத்துவம் செய்தார்கள் என்பதை,

"அரும்பிணி உறுநர்க்கு வேட்பது கொடாது

மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்"

என நற்றிணை காட்டுகின்றது (Narayanasamy Iyer, 1867).

## மருந்து

'கைகண்ட மருந்து' என்பது நாட்டார் வழக்குத் தொடராகும். நோய் தீர்க்கும் நல் மருந்தையே இத்தொடர் சுட்டுகின்றது. சங்க இலக்கியமும் மருந்தின் நற்பண்பினைப் பற்றிப் பல இடங்களில் எடுத்துக் கூறுகின்றது. நோயாளியின் துன்பத்தையும், வேதனையையும் துடைப்பது 'மருந்து' என்பதை,

"அருந்துயர் அவலம் தீர்க்கும் மருந்து"

என நற்றிணை கூறுகின்றது (Subramanian, 2010). மேலும், 'நோயாளியின் அருந்துயரையும், கடும் வேதனையையும் தீர்ப்பது மருந்து' என்பதை,

"அருந்துயர் ஆரமர் தீர்க்கும் மருந்து"

எனக் கலித்தொகையில் குறிஞ்சிக்கலிக் கூறுகின்றது (Subramanian, 2010). உயிரைக் காக்கும் தன்மை கொண்டது மருந்து என்பதால்,

"இன்னுயிர் செய்யும் மருந்து"

எனக் கலித்தொகையில் பாலைக்கலி எடுத்துரைக்கின்றது (Subramanian, 2010). மருந்து என்பது 'உடல் நோயினைத் தீர்ப்பது உளநோயினைத் தீர்ப்பது, நோய்வராமல் தடுப்பது, மரணத்தைத் தடுப்பது' எனத் திருமூலர் திருமந்திரத்தில் விளக்கம் தருகின்றார்

## நோய்கள்

பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் நோய் என்பது இருவகையாக வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. மனவருத்தம் தருகின்ற துயரங்கள் நோய் (பையுள்) என்றும், உடல் வருத்தம் தருகின்ற துயரங்கள் பிணி (சிறுமை) என்றும் கூறுகின்றது

"பையுளும் சிறுமையும் நோயும் பொருளும்"

ஒரு மனிதனுக்கு உடலாலும், உள்ளத்தாலும் துயரங்கள் தருவது நோயாகும். இடைக்காலத்தில் நோய் என்பது 'வியாதி' என்னும் சொல்லின் மூலம் குறிக்கப்பட்டுள்ளது (Pasupathi, 2010). சோழர் காலத்தைச் சேர்ந்த திருமுக்கூடல் கல்வெட்டு நோயினால் பாதிக்கப்பட்டவர்களை 'வியாதி பட்டுக் கிடப்போர்' எனக் கூறுகின்றது. சங்க இலக்கியங்களிலும் பிணி, வருத்தம் என்ற இருசொற்கள் பயின்று வந்துள்ளன. உடல் சார்ந்த நோயினைப் பிணி என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன என்பதை,

"உயக்கு பிணி வருத்தமொடு இயங்கல் செல்லாது

நடுங்கு பிணி நலிய நல்எழில் சாஅய்" (Narayanasamy Iyer, 1867)

என நற்றிணையும்,

"பெண்டிரும் பிணிபுடையீரும்"

எனப் புறநானூறும் பிணி என்றும் உடல் நோய்களைப் பற்றிக் கூறுகின்றன (Swaminatha Iyer, 2014). இது போன்ற மருத்துவக் குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன.

கலித்தொகையில் 'கருங்குட்டம்' என்ற ஒரு வகையானத் தொழுநோய் பற்றியச் செய்தி காணப்படுகின்றது. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், கைகால் குறைந்து (காறக் குறைந்து) தலைமுடியுதிர்ந்து (தீரத்துறைந்த தலை) தோல் வெளிறி (கறைபட்டு) துன்பம் அடைவார்கள் என்பதை,

"தீரத்தறைந்த தலையும் தம்கம்பலும்

காறக் குறைந்த கறைபட்டு வந்து - நம்

சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பானைத்"

எனக் கலித்தொகையில் காட்டுகின்றது (Subramanian, 2010). இவ்வாறு சங்க இலக்கியங்களில் பல்வேறு உள்ள நோய்களையும், உடல் நோய்களையும் பற்றியக் குறிப்புகள் பல இடங்களில் காணக்கிடைக்கின்றன.

## அறுவைச் சிகிச்சை முறை

சங்க இலக்கியங்களில் போரும் வீரமும் பற்றியச் செய்திகள் பேசப்படும். அதே சமயத்தில், போர்க்களத்தில் படுகாயமுற்றோர் பற்றிய வர்ணனைகளும் இடம்பெற செய்கின்றன. எனவே காயப்பட்டோருக்குரிய அறுவைச் சிகிச்சை முறைகளும் அக்காலத்தில் இருந்திருக்கிறது. 'ஊனுக்கு ஊனிடல்' என்ற பழமொழியும் இங்கு நினைவுக் கொள்ளத்தக்கதாகும். அறுவைச் சிகிச்சை முறை பற்றியச் செய்திகள் சோழர் காலத்திலேயே திருமுக்கூடற் கல்வெட்டில் பதிவுச் செய்யப்பட்டுள்ளன. அக்காலத்துக் கண்ணப்பநாயனார் வரலாறும் இதனைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

பண்டைய நாளில் அறுவைச் சிகிச்சை முறைகளில மருந்து மரங்களின் பட்டை, பால், இலைச்சாறு முதலியவற்றில் இருந்து பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அறுப்பட்ட காயங்களுக்கும், வெட்டுக் குத்துக் காயங்களுக்கும் சிகிச்சைச் செய்யப்பட்டதைப் பற்றிய குறிப்பு புறநானூற்றில் உள்ளது.

"இரும்புச்சுவை கொண்ட விழுப்புண் நோய் தீர்த்து

மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி

வடுவின்றி மயங்கிய யாக்கையன்"

பட்டை, பால் என்பன எடுப்பதற்காக வெட்டப்பட்ட மருந்து மரத்தின் தோற்றத்திற்குப் பகை மறவரின் இரும்பாயுதங்களால் பதம்பார்க்கப்பட்ட உடம்பினை ஒப்பிடுகிறார் இப்புலவர். வெட்டுக் காயங்களுக்குப் பஞ்சு வைத்துக்கட்டும் வழக்கைக் காரிக்கண்ணனார் என்ற புலவர், "பஞ்சியும் பிக்கையே களையாப் புண்ணர்" (புறம், பா.353, சாமிநாதையர், உ.வே.,2014) என்ற புறநானூற்றுப் பாடல் அடியில் சுட்டினார் (Swaminatha Iyer, 2014). போரிலே புண்பட்டு பிளந்த காயங்களை மருத்துவர் ஊசியும்

நூலும் கொண்டு தைத்துக் குணப்படுத்தியிருக்கிறார்கள். இதனைப் பதிற்றுப்பத்தில் வரும் பின்வரும் அடிகள் மூலம் அறியலாம்.

"மீன்றேர் கொட்பிற் பணிக்கய மூழ்கிச்

சிரல் பெயர்ந் தன்ன நெடுவெள்ளூசி

நெடுவசி பரந்த வடு"

இப்பாடல் மார்பில் பட்ட புண்ணை நெடுவள்ளூசி என்னும் ஊசியால் வைத்துக் காயத்திற்குக் கட்டுப்போட்டதைப் பதிற்றுப்பத்துச் சுட்டிக் காட்டுகின்றது (Swaminatha Iyer, 2010).

## மகளிர் மருத்துவம்

சங்ககாலத்தில் பெண்களைப் பாதிக்கின்ற நோய்கள் பற்றியும், தாய்மை மருத்துவம் பற்றியும் மக்கள் ஆழ்ந்த அறிவு பெற்றிருந்தார்கள். சங்க கால இலக்கியங்களில் கர்ப்பிணிப் பெண்களைப் பற்றியக் குறிப்புகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. சங்ககால மருத்துவர்கள் கருமுனையின் பெருக்கம் மற்றும் வளர்ச்சி, சூலுற்ற காலத்தில் ஏற்படும் உடல்நிலை மாற்றங்கள், கருச்சிதைவு மற்றும் பிரசவம் ஆகியவற்றினைப் பற்றிய ஆழ்ந்த அறிவு பெற்றுக் காணப்பட்டார்கள் என்பதைச் சங்க இலக்கியப் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

மகப்பேறு முடிந்த பெண்கள் தங்கள் உடம்பில், வெண்கடுகை நெய்யுடன் அரைத்துப் பூசினார்கள். அவ்வாறு செய்வதால் அடுத்து வரும் மகப்பேறுகள் எளிதாக அமையும். என்பதை,

“கடும்பு உடை கடும் சூல் நம் குடிக்கு உதவி

நெய்யோடு இமைக்கும் ஐயவி திரள் காழ்

விளங்கு நகர் விளங்க கிடந்தோள் குறுகி

புதல்வன் ஈன்று என பெயர் பெயர்த்து அம் வரி

திதலை அல்குல் முது பெண்டு ஆகி

துஞ்சுதியோ மெல் அம்_சில்_ஓதி என

பன் மாண் அகட்டில் குவளை ஒற்றி”

இப்பாடல் அடிகள் மூலம் அறியலாம் (Narayanasamy Iyer, 1867).

## மூலிகை மருத்துவம்

சங்க இலக்கியங்களில் இருநூறுக்கு மேற்பட்ட தாவரங்களைப் பற்றிய செய்திகள் எடுத்துரைக்கின்றன. இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள செடி, கொடிகள் பிற்காலத்தில் மருந்தாகப் பயன்பட்ட செய்திகளை சித்தர் நூல்கள் காட்டுகின்றன. பழந்தமிழர்களே மூலிகை மருந்துவ முறையினை உலகிற்கு எடுத்துக் கூறினார்கள். சங்ககால மக்கள் மருந்தாகும் மரங்களைப் பாதுகாத்து வந்துள்ளார்கள் என்பதை,

“மரஞ்சா மருந்துங் கொள்ளார் மாந்தர்”

என இவ்வுலகத்து மாந்தர்கள் மரம் பட்டுப் போகும்படி அதில் உள்ள மருத்துவக் குணங்கொண்ட பாகங்களை முழுவதும் எடுக்கமாட்டார்கள் என்ற கருத்துத் தோன்ற கணியன் பூங்குன்றனார் கூறுவதன் மூலம் அறிய முடிகின்றது (Narayanasamy Iyer, 1867).

## முடிவுரை

சங்ககாலத் தமிழர்கள் தனக்கு ஏற்படும் நோய்கள், நோய்களுக்கான காரணம், அவற்றினைக் கண்டறியும் வல்லமை கொண்டிருந்தனர். மேலும், அந்நோய்களுக்குத் தேவையான மருந்துகள் அதனைப் பயன்படுத்தும் முறைகள் பற்றியும் தெளிவாக அறிந்திருந்தனர். அக்கால மருத்துவ முறைகள் பின்வரும் காலங்களில் பன்முறையில் வளர்ச்சி அடைந்துள்ளன. இன்றைய மருத்துவ முறைகளில் குறிப்பிடப்படும் அறுவைச் சிகிச்சை முறையைகூட, போரில் காயமடைந்த போர்வீரர்களுக்குக் கூர்மையான ஊசி போன்ற பகுதியில் வெண்மையான நூலினைப் பொருத்தி தைத்துள்ளனர் என்பதையும் இலக்கியங்களில் வழியாக அறிய முடிகிறன்றது. அக்கால மக்கள் இயற்கை சார்ந்த முறையில் பல்வேறு மருந்துவ முறைகளைக் கையாண்டு நோயற்ற வாழ்வை வாழ்ந்துள்ளார்கள் என்பதை இவ்வாய்வு கட்டுரையின் மூலம் அறிய முடிகின்றது.

## References


Devaneya Pavanar, (2017) Pandai Tamil Nagarikamum Panpaadum, Gowra Pathippaga Kuzhumam, Chennai, India.

Govindan, K., (1990) Tamizhar Panpaadu, Kalagha veliyeedu, Chennai, India.

Jeyabal, R., (2004) Agananooru, New Century Book House, Chennai, India.

Narayanasamy Iyer, A., (1867) Natrinai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Pasumalaiyarasu, M., (2006) Sentamilum Siddha Maruthuvamum. Gowra Pathippaga Kuzhumam, Chennai, India.

Pasupathi, M.V., (2010) Semmozhitamizh Ilakkanam, Ilakkiyam, Tamil University, Thanjavur, India.

Somasundranaar, P.V., (1962) Kurunthogai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Subramanian, S.V., (2010) Kalittokai, Manivasagar Pathippagam, Coimbatore, India.

Swaminatha Iyer, U.V., (1974) Pathupattu Nachinarkiniyar Uraiyum, U.V.SA., Library, Chennai, India.

Swaminatha Iyer, U.V., (2010) Patirruppattu Moolam Uraiyum, U.V.SA., Library, Chennai, India.

Swaminatha Iyer, U.V., (2014) Purananooru Moolam Uraiyum, U.V.SA., Library, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License